بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

**ஜுமுஆ பேருரை**

**அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர் ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் - அல்லாஹ் தனது வல்லமைமிக்க உதவியினால் அவர்களை வலுப்படுத்துவானாக) அவர்கள் பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாசலில் 21.11.2014 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

Summary of the Friday Sermon - 21, Nov 2014 (Tamil)

# துஆக்களின் அருள்

தஷஹ்ஹுது, தஅவ்வுஸ், சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸூர் (அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் கூறினார்கள்:-

நான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் துஆக்கள் ஏற்றுக் கொள்ளப்பட்ட சம்பவங்களிலிருந்து சில கூற்றுக்கள் மற்றும் மேற்கோள்கள்களை எடுத்து வைப்பேன். சில சம்பவங்கள் இருக்கின்றன. அடையாளங்கள் பற்றியும் அன்னார் கூறியுள்ளார்கள். மேலும் இறை உதவி பற்றி கூறியுள்ளார்கள். மேலும் அல்லாஹ் இந்த காலத்தில் என்னை தன்னுடைய தூதராக அனுப்பியுள்ளான் என்று அறிவுரை வழங்கினார்கள். அவருடைய பேச்சைக் கேளுங்கள். அதிலேயே அருள் உள்ளது. மேலும் இந்த அமைப்பினுடைய முன்னேற்றம் இறை நியதிகளில் ஒன்றாகும். அவரை ஏற்றுக் கொள்விதில் தான் மனித நேயத்தின் எஞ்சியிருத்தல் உள்ளது. ஒரு முறை லூதியானாவைச் சேர்ந்த கண்ணியத்திற்குரிய மர்ஹூம் நவாப் முஹம்மது அலி கான் சாஹிப் அவர்களிடமிருந்து எனக்கு ஒரு கடிதம் வந்தது. அதில் ஒரு சில வாழ்வாதாரத்திற்கான வழிகள் அடைபட்டு விட்டன. அது திறப்பதற்காக துஆ செய்யுங்கள் என்று கூறியிருந்தார். (ஒரு சில வியாபார சிக்கல்கள் இருந்தன. கூறுகிறார்கள்) நான் துஆ செய்த போது *திறந்து விடும்* என்று எனக்கு இல்ஹாம் இறங்கியது. நான் கடிதம் மூலமாக இந்த செய்தியை அவர்களுக்கு தெரிவித்து விட்டேன். பிறகு ஓரிரு தினங்களுக்குப் பிறகு வாழ்வாதாரத்திற்கான வழிகள் திறந்து விட்டன. மேலும் அவர்களின் கொள்கைப் பிடிப்பு உறுதியாகி விட்டது. பிறகு இன்னொரு முறை அவர்கள் தன்னுடைய மறைமுகமான வேண்டுதல்கள் தொடர்பாக எனக்கு ஒரு கடிதம் எழுதியிருந்தார்கள். எந்த நேரத்தில் அவர்கள் அந்த கடிதத்தை தபால் செய்தார்களோ அதே நேரத்தில் எனக்கு அதே கருத்தையுடைய கடிதம் உங்களுக்கு வரும் என்று இல்ஹாம் வந்தது. அப்போது நான் எவ்வித காலதாமதமுமின்றி இந்த விஷயங்கள் அடங்கிய கடிதத்தை நீங்கள் எனக்கு அனுப்புவீர்கள் என்று கடிதம் எழுதினேன். இரண்டாவது நாள் அந்த கடிதம் வந்தது. என்னுடைய கடிதம் அவர்களுக்கு கிடைத்த போது இந்த மறைமுகமான செய்தி பற்றி எவ்வாறு தெரிந்தது. ஏனென்றால் இந்த ரகசியம் தொடர்பாக யாருக்குமே தெரியாது என்று எண்ணி வியப்பின் நதியில் மூழ்கி விட்டார்கள். அவர்களுடைய கொள்கைப் பிடிப்பு எவ்வளவு அதிகமாகியது என்றால் அன்பிலும், விசுவாசத்திலும் மாய்ந்து விட்டார்கள்.

வஸீர் செய்யது முஹம்மது ஹஸன் சாஹிபோடு சந்திப்பு நிகழ்ந்த போது எதார்த்தமாக பேசிக் கொண்டிருக்கும் போது வஸீர் சாஹிப் மற்றும் நவாப் சாஹிப் இருவரும் என்னுடைய அடையாளங்கள் தொடர்பாக பேசப்பட்டது. அப்போது நவாப் சாஹிப் மர்ஹூம் அவர்கள் ஒரு சிறிய பதிவேட்டை தன்னுடைய சட்டைப் பையிலிருந்து எடுத்து வஸீர் சாஹிப் அவர்களுக்கு முன் வைத்து என்னுடைய ஈமான் மற்றும் கொள்கைப் பிடிப்பு காரணம் இந்த புத்தகத்தில் எழுதப்பட்டிருக்கின்ற இரு முன்னறிவிப்புகள் தான் என்று கூறினார்கள். ஒரு சில காலத்திற்குப் பிறகு அவர்களுடைய மரணத்திற்கு ஓரிரு தினங்களுக்கு முன்பு அவர்களை நலம் விசாரிப்பதற்காக லூதியானாவில் அவருடைய இல்லத்திற்கு சென்ற போது அவர் தன்னுடைய அறைக்குச் சென்று அதே சின்ன பதிவேட்டை எடுத்து

வந்து இதை என்னுடைய உயிர் மூச்சாக வைத்துள்ளேன். இதை காணும் போதெல்லாம் நிம்மதி அடைகின்றேன் என்று கூறினார்கள். மேலும் எங்கு அந்த இரு முன்னறிவிப்புகளும் எழுதப்பட்டிருந்ததோ அந்த இடத்தைக் காட்டினார்கள். பிறகு ஓரிடத்தில் அன்னார் கூறினார்கள். ஒரு சில வருடங்களுக்கு முன்பு மதராஸைச் சார்ந்த வணிகராகிய முதல் வரிசையிலுள்ள ஜமாஅத்தின் தூயவர்களில் ஒருவரான சேட் அப்துர் ரஹ்மான் சாஹிப் அவர்கள் காதியானுக்கு வந்தார்கள். அவர்களுடைய வியாபார விவகாரங்களில் ஏதோ பிளவும், கஷ்டமும் ஏற்பட்டிருந்தது. அவர்கள் துஆவிற்காக விண்ணப்பித்தார்கள். அப்போது கீழ்வரும் இந்த இல்ஹாம் இறங்கியது. *ஆற்றல் பெற்றவனாவான். அவன் சீர்குலைந்த வேலைகளை சரிசெய்பவனாவான். சீராக இருக்கக் கூடியவற்றை உடைக்கக் கூடியவனாவான். அதன் ரகசியத்தை யாரும் அறிய மாட்டார்கள்.* இந்த இல்ஹாமிய வாக்கியத்தின் பொருள் என்னவென்றால், இறைவன் சீர்குலைந்த வேலையை சரியாக்குவான். ஆனால் ஒரு சில காலத்திற்குப் பிறகு சீரானதை உடைத்து விடுவான். கூறுகிறார்கள். இந்த இல்ஹாம் காதியானிலேயே சேட் சாஹிபிற்கு சொல்லப்பட்டது. ஒரு சில நாட்கள் தான் கடந்திருக்கும். இறைவன் அவர்களுடைய வியாபார விவகாரங்களில் ஒரு ஒளியை ஏற்படுத்தி விட்டான். மேலும் ஒரு சில காலத்திற்குப் பிறகு அந்த சீரான வேலைகள் உடைந்து விட்டது. இல்ஹாமிற்கேற்ப முதலில் வியாபாரத்தில் முன்னேற்றம் ஏற்பட்டது. ஒரு சில காலத்திற்குப் பிறகு மெது மெதுவாக அதில் இழப்பு ஏற்பட ஆரம்பித்தது. மேலும் வியாபாரம் சீர்குலைந்து விட்டது.

பிறகு தன்னைப் பற்றி ஓரிடத்தில் கூறுகின்றார்கள். எனக்கு நீண்டகாலமாக இரு வகையான நோய்கள் இருந்து வந்தது. ஒன்று கடுமையான தலைவலி. அதன் காரணமாக மிகவும் நிம்மதி இழந்து விடுவேன். மேலும் மிக அதிகமான கஷ்டம் ஏற்பட்டுவிடும். இந்த நோய் ஏறக்குறைய 25 வருடங்கள் வரை இருந்தது. அத்தோடு தலை சுற்றுலும் ஏற்பட்டுவிடும். மேலும் இந்த நோய்களின் முடிவு வலிப்பு நோயை ஏற்படுத்தும் என்று மருத்துவர்கள் எழுதியுள்ளார்கள். ஆக, என்னுடைய மூத்த சகோதரர் மிர்ஸா குலாம் காதிர் ஏறக்குறைய இரு மாதங்கள் இதே நோயினால் பாதிக்கப்பட்டு இறுதியில் வலிப்பு நோய் ஏற்பட்டுவிட்டது. மேலும் அதன் காரணத்தினாலேயே அவர்களின் மரணமும் நிகழ்ந்தது. எனவே, நான் இறைவனிடம் என்னை இதுபோன்ற நோய்களிலிருந்து பாதுகாப்பாக வைப்பாயாக என்று துஆ செய்து வந்தேன். ஒரு முறை ஆன்மீக காட்சியில் காட்டப்பட்டது என்னவென்றால், ஒரு கருப்பு நிற கால்நடை வடிவையுடைய அது செம்மறி ஆட்டின் உயரத்தை ஒத்ததாக இருந்தது. பெரிய பெரிய முடிகள் இருந்தது. பெரிய பெரிய கைகள் இருந்தன. அது என்னைத் தாக்க ஆரம்பிக்கின்றது. அப்போது என்னுடைய உள்ளத்தில் இரு வலிப்பு நோய் என்று போடப்பட்டது. அப்போது நான் என்னுடைய வலக்கரத்தை அதனுடைய நெஞ்சில் வலுவாக அடித்தேன். மேலும் நீ என்னுடைய அங்கம் கிடையாது. தூரம் சென்று விடு என்று கூறினேன். இறைவன் அறிவான் அதற்குப் பிறகு அந்த அபாயகரமான நோய் மேலும் கடுமையான தலைவலி முற்றிலுமாக சென்று விட்டது. எப்போதாவது தலை சுற்றுதல் மற்றும் இருக்கின்றது. இதுவும் இரு மஞ்சள் நிற போர்வையின் முன்னறிவிப்பில் எவ்வித இடையூரும் வந்து விடக்கூடாது என்பதற்காகும். (மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தொடர்பாக அவர் இரண்டு போர்வைகளில் இருப்பார் என்ற முன்னறிவிப்பும் உள்ளது. அந்த இரு போர்வைகள் என்பதன் பொருள் இரு நோய்களாகும். முதலாவது இந்த தலை சுற்றுதல் பிரச்சனை. கூறினார்கள்) இரண்டாவது நோய் டயாபடீஸ். ஏறக்குறைய 20 வருடங்களாக எனக்கு அது இருந்து வருகிறது. இந்த அடையாளம் தொடர்பாக இதற்கு முன்பும் கூறப்பட்டு விட்டது. டாக்டர்களின் அனுபவத்தின் அடிப்படையில் சர்க்கரை நோயின் முடிவு ஒன்று நீர் வடிதலாக இருக்கும் என்ற எண்ணம் ஒரு நாள் எனக்கு எழுந்தது. ஆக, அதே சமயம் நீர் வடிதல் தொடர்பாக எனக்கு இல்ஹாம் இறங்கியது. *நஸலதிர் ரஹ்மத்து அலஸ் சுலுஸில் அய்னி வ அலல் ஆகரைன்*- அதாவது மூன்று உறுப்புகளில் அருள் இறக்கப்பட்டுள்ளது. கண் மற்றும் மேலும் இரு உறுப்புகளில். பிறகு எப்போது எனக்கு கார் பங்க்கல் பற்றி உள்ளத்தில் எழுந்ததோ அப்போதோ *அஸ்ஸலாமு அலைக்கும்* என்று இல்ஹாம் இறங்கியது. ஆக, ஒரு நீண்ட காலம் நான் இந்த இன்னல்களிலிருந்து பாதுகாப்பாக இருக்கின்றேன்.

ஹஸ்ரத் மவ்லவி அப்துல் கரீம் சாஹிப் அவர்களுடைய நோய் தொடர்பாக கூறுகிறார்கள். கடந்த குத்பாவில் அவர்களைப் பற்றி கூறப்பட்டது. அதாவது ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் தொடர்பாக

எப்போது அன்னாரது மரணம் நிகழ்ந்ததோ அப்போது ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களுக்கு அதிகமான துக்கம் ஏற்பட்டது. எவ்வாறிருப்பினும் அவர்களுக்கு ஓர் மேலான அந்தஸ்து இருந்தது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் நோய்வாய்ப்பட்டிருந்த தருணத்தில் அவர்களுக்காக துஆ செய்து வந்தார்கள். அது தொடர்பாக ஒரு இல்ஹாம் பற்றி கூறியவாறு அன்னார் கூறுகின்றார்கள்.

கடந்த வருடம் அதாவது அக்டோபர் 11, 1905 புதன்கிழமை அன்று நமது ஒரு தூய நண்பர் அதாவது மவ்லவி அப்துல் கரீம் சாஹிப் அவர்கள் இந்த கார் பங்க்கல் அதாவது கொப்புளம் காரணத்தினால் வஃபாத் ஆனார்கள். அவர்களுக்காக நான் அதிகமாக துஆ செய்திருந்தேன். ஆனால், எந்தவொரு இல்ஹாமும் அவர்களுக்கு நிம்மதி வழங்கக்கூடியதாக இருக்கவில்லை. மாறாக, கஃபனில் சுருட்டப்பட்டு விட்டார் என்ற இல்ஹாம் மீண்டும் மீண்டும் வந்து கொண்டிருந்தது. அவர்களுக்கு 47 வயதாக இருந்தது. *இன்னாலில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிவூன். இன்னல் மனாயா லா ததீஷ ஷிஹாமுஹா* – அதாவது மரணத்தின் அம்பு தவறுவதில்லை. அப்போதும் துஆ செய்யப்பட்ட போது *யா அய்யுஹன்னாசுஹ்புது ரப்பகுமுல்லதீ ஹலககும் துஹ்ஸிநூனல் ஹயாதத் துன்யா என்ற இல்ஹாம்* இறங்கியது. அதாவது மக்களே! நீங்கள் உங்களைப் படைத்த இறைவனை வணங்குங்கள். அதாவது அவனையே உங்களுடைய பணிகளை செய்யக் கூடியவனாவான் என்று புரிந்து கொள்ளுங்கள். மேலும் அவன் மீதே நம்பிக்கை வையுங்கள். நீங்கள் உலக வாழ்க்கைகளை மேற்கொள்கிறீர்களா ? இதில் எவரையாவது அவர் மரணித்து விட்டால் அதிகமான இழப்பு ஏற்பட்டு விடும் என்று கருதுவது இணை வைத்தலாகும். மேலும் அவனுடைய வாழ்க்கைக்காக அதிக அழுத்தம் கொடுப்பது ஒரு வகையான வணக்கமாகும் என்று சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. அதற்குப் பிறகு நான் அமைதியாகி விட்டேன். மேலும் இவருக்கு நிச்சயமாக மரணம் நிகழும் என்பதையும் புரிந்து கொண்டேன். ஆக, 1905 ஆம் ஆண்டு அக்டோபர் 11 ஆம் தேதி புதன் கிழமை அஸர் நேரத்தில் இவ்வுலகை விட்டு பிரிந்து சென்றார்கள். அவருக்காக துஆ செய்த போது என்னுடைய உள்ளத்தில் எழுந்த வேதனையை இறைவன் கண்டும் காணாமல் விட்டுவிடவில்லை. அவன் இந்த இழப்பிற்கு இன்னொரு வெற்றியைக் கொண்டு நிவர்த்தி செய்ய வேண்டும் என்று விரும்பினான். எனவே அந்த அடையாளத்திற்காக சேட் அப்துர் ரஹ்மான் சாஹிப் அவர்களைத் தேர்ந்தெடுத்தான். இறைவன் அப்துல் கரீமை நம்மிடமிருந்து எடுத்துக் கொண்டிருந்தாலும் மீண்டும் அப்துர் ரஹ்மானை நமக்கு வழங்கிவிட்டான். அதே நோய் இவர்களுக்கு வந்து விட்டது. இறுதியில் இந்த அடியானின் துஆக்களினால் அவர் குணமாகிவிட்டார். அல்ஹம்துலில்லாஹி அலா தாலிக். கூறுகிறார்கள்.

நூற்றுக்கணக்கான முறை என்னுடைய அனுபவம் என்னவென்றால் இறைவன் எவ்வாறு கண்ணியத்திற்குரியவனாகவும், கருணையாளனாகவும் இருக்கின்றான் என்றால் தன்னுடைய நுட்பமான ஞானத்தினால் ஒரு துஆவை ஏற்றுக் கொள்ளவில்லை என்றால் வேறு ஏதேனும் துஆக்களை ஏற்றுக் கொள்கிறான். (இங்கு துஆக்களின் ஆன்மா மற்றும் தத்துவம் தொடர்பாக தெரிய வருகிறது. எங்களுடைய துஆக்கள் ஏற்றுக் கொள்ளப்படவில்லை என்று ஒரு சிலர் கூறுகின்றார்கள். ஆனால் சில சமயம் இறைவனுடைய நியதி இருக்கும் போது நபிமார்களுடைய துஆக்கள் கூட ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை. ஆனால் அதற்குப் பகரமாக பிற துஆக்கள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. கூறுகிறார்கள்)

ஒரு துஆவை ஏற்றுக் கொள்ளவிட்டால் அதற்கு பகரமாக அதைப் போன்றே இருக்கின்ற வேறு ஏதேனும் துஆவை ஏற்றுக் கொள்கிறான். பிறகு தன்னுடைய உண்மைத்துவத்திற்கு ஆதாரமாக திருக்குர்ஆனில் இருக்கின்ற முன்னறிவிப்புகளில் ஒரு முன்னறிவிப்பு வாகனம் ஆகும். அது தொடர்பாக அன்னார் கூறுகிறார்கள். ஒரு புதிய வாகனம் வெளிப்பட இருக்கின்றது. அது மஸீஹே மவ்வூதின் வருகைக்கு ஒரு குறிப்பான அடையாளமாகும். திருக்குர்ஆனில் எழுதப்பட்டுள்ளது. வ இதல் இஷாரு உத்திலத் அதாவது இறுதி காலத்தில் ஒட்டகங்கள் வீணாகி விடும். இதே போன்று முஸ்லிம் ஹதீஸிலும் வந்துள்ளது. வலயத்ருகன்னல் கிலாசு ஃபலா யுஸ்ஆ அலைஹா – அதாவது அந்த காலத்தில் ஒட்டகங்கள் வீணாகி விடும். மேலும் அதன் மீது எவரும் பயணம் செய்ய மாட்டார்கள். ஹஜ் நாட்களில் மக்காவிலிருந்து மதீனா வரை ஒட்டகத்தில் பயணம் செய்யப்படுகிறது. இந்த

பயணத்திற்கு ரயில் தயாராகக்கூடிய அந்த நாட்கள் மிக அருகில் உள்ளன. அப்போது அந்த பயணத்தின் மீது லயத்ருகன்னல் கிலாசு ஃபலா யுஸ்ஆ அலைஹா என்ற வாக்கியம் பூர்த்தி அடையும். (இதற்குப் பிறகு ஹுஸீர் அவர்கள் அப்துல் ஆதம் தொடர்பான ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய முன்னறிவிப்பைப் பற்றி விளக்கமாக கூறினார்கள்.)

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள். திருக்குர்ஆனின் அருள்கள் மனித சக்தியை விட மிகவும் அதிகமானவை. மேலும் ஏற்றுக் கொள்ளக்கூடியவர்களுக்கு அடையாளங்களைக் காட்டி உறுதியான இறைஞானத்தை வழங்குகின்றது. பிறகு அதன் அருள்களின் மூலமாக அற்புதங்கள் வெளிப்படுகின்றன. மிகவும் வியக்கத்தக்க அடையாளங்கள் வெளிப்படுகின்றன. அன்னார் கூறுகின்றார்கள். குர்ஆனின் இந்த அருள்களை நான் ஒரு கதையாக உங்களுக்கு கூறவில்லை. மாறாக, எனக்கு காட்டப்பட்ட அடையாளங்களை உங்கள் முன் வைக்கின்றேன். அந்த அனைத்து அடையாளங்களும் ஏறக்குறைய ஒரு இலட்சம் ஆகும். மாறாக, அவைகள் ஒரு இலட்சத்தையும் விட அதிகமாக இருக்கலாம். குர்ஆனில் இறைவன் கூறுகின்றான். எவர் என்னுடைய இந்த வேதத்தைப் பின்பற்றுவாரோ அவர் இந்த வேதத்தினுடைய அற்புதங்கள் மீது மட்டும் ஈமான் கொள்ள மாட்டார். மாறாக, அவருக்கும் அற்புதங்கள் வழங்கப்படும். ஆக, நான் இறை வேதத்தின் தாக்கத்தினால் அந்த அற்புதங்களை பெற்றுள்ளேன். அவைகள் மனித சக்தியை விட உயர்வானவை. மேலும் முழுக்க முழுக்க இறைவனுடைய செயலாகும். பூமியில் வந்த நிலநடுக்கங்கள். உலகை விழுங்கிக் கொண்டிருக்கும் ப்ளேக் நோய். இவைகள் எனக்கு காட்டப்பட்ட அந்த அற்புதங்களைச் சார்ந்தவையாகும். இந்த அழிவுகள் வர இருக்கின்றன என்று இந்த அழிவுகளைப் பற்றிய பெயர் மற்றும் அறிகுறிகள் இல்லாத போதே 25 வருடங்கள் முன்பாகவே இந்த அழிவுகள் வர இருக்கின்றன என்று நான் என்னுடைய புத்தகம் பராஹீனே அஹ்மதிய்யாவில் முன்னறிவிப்பாக வெளியிட்டிருந்தேன். ஆக, அந்த அழிவுகள் வந்து விந்தன. இப்போது மேலும் அது நின்று விடவில்லை. மாறாக, வரக்கூடிய அழிவுகள் இந்த அழிவுகளை விட மிக அதிகமானதாக இருக்கும். ஒரு கொடிய வகை ப்ளேக் நோயும் வர இருக்கின்றது. அது இந்த நாட்டிலும் பிற நாடுகளிலும் வெளிப்படும். மேலும் அதிக கஷ்டத்தைக் கொடுக்கும் உலகினுடைய செயல்கள் மற்றும் அவர்கள் இறைவன் விட்டும் தூரம் செல்கின்றார்கள். தூரம் மட்டும் செல்வதில்லை. மாறாக, அநீதியும் இழைக்கின்றார்கள். இவைகள் அந்த அழிவை மீண்டும் அழைப்பதற்கு இவர்களின் செயல்களே விரைந்து கொண்டிருக்கின்றது. அல்லாஹ் கருணை புரிவானாக. மேலும் அஹ்மதிகளுக்கு துஆக்கள் செய்யக் கூடிய நல்வாய்ப்பினை வழங்குவானாக. மேலும் நம்மை நமது செயல்களை சரியாக வைப்பதற்கான வாய்ப்பினை வழங்குவானாக. முஸ்லிம் நாடுகளின் நிலைமையும் இதே நிலைமை தான். முஸ்லிம்களின் நிலைமையும் இதுவாகத் தான் இருக்கின்றது. அவர்கள் இறைவனை விட்டு தூரம் செல்கின்றனர். மேலும் சரியான வழியில் செல்லுங்கள் என்று அழைப்பவர் மீது ஏளனம் செய்வார்கள். எள்ளி நகையாடுவார்கள். மேலும் இவர் குழப்பத்தை பரப்புவதற்கு முயற்சி செய்கிறார் என்றும் கூறப்படும்.

இப்போது இறைவன் மீண்டும் ஒரு முறை அதே ஆற்றல்களை உயிரூட்ட வேண்டும் என விரும்பியுள்ளான். எப்போதும் *யுஹ்யில் அர்ழ பஃத மவ்திஹா* செய்யக்கூடிய அந்த இறைவன் எண்ணியுள்ளான். மேலும் அதற்காக பல வழிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஒரு பக்கம் மென்மையான வார்த்தைகளில் அழைப்பதற்காகவும், மக்களுக்கு நேர்வழி காட்டுவதற்காகவும் இறைவன் புறமிருந்து ஒருவர் அனுப்பப்பட்டுள்ளார். (அதாவது தன்னுடைய வருகை பற்றி கூறுகிறார்கள்.) மறுபக்கம் அறிவுகள் மற்றும் முன்னேற்றம் இருக்கிறது. மேலும் அறிவு வளர்ந்து கொண்டிருக்கிறது. கூறினார்கள். ஆதாரங்கள் முழுமை அடைவதற்கு அல்லாஹ் அடையாளங்களை வெளிப்படுத்துகின்றான். அன்னாருடைய காலத்திலும் ஏராளமான அடையாளங்கள் வெளிப்பட்டன. புயல், சூரிய, சந்திர கிரகணம், நிலநடுக்கங்கள் போன்றவை. பிறகு கூறினார்கள்.

அழிவின் அடையாளங்களின் தொடரும் இருக்கின்றது. அதில் இப்போது கடுமையாக பரவிக் கொண்டிருக்கக்கூடிய ப்ளேக் நோயும் ஒரு அடையாளமாகும். (கடந்த சந்ததிகள் ஒரு போதும் கண்டிராதவைகள் அந்த காலத்தில் இருந்தது. ) அதிகமானோர் இந்த அடையாளங்களிலிருந்து பலன் பெறுகின்றனர். இந்த

போதனையை புரிகின்றார்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் வாதங்களைப் புரிந்து அதை ஏற்றுக் கொள்கின்றார்கள். ஒவ்வொரு பகுதியிலும், ஒவ்வொரு மட்டத்திலும், ஒவ்வொரு நாட்டிலும் அப்படிப்பட்டவர்கள் இருக்கின்றார்கள். அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நூற்றுக்கணக்கில், ஆயிரக்கணக்கில் மாறாக, இலட்சக் கணக்கில் ஜமாஅத்தில் இணைகின்றார்கள். பிறிதோரிடத்தில் அன்னார் கூறுகின்றார்கள்.

நினைவில் கொள்ளுங்கள். என்னுடைய கைகளால் வெளிப்பட்ட மற்றும் வெளிப்பட்டுக் கொண்டிருக்கும் இது போன்ற அடையாளங்கள் மற்றும் முன்னறிவிப்புகளை ஆதாரமாக உங்களால் ஒரு போதும் கொண்டு வர முடியாது. அதை தேடித் தேடி மரணித்து போனாலும் சரியே. மாறாக, இறைவனுடைய செயல் ரீதியிலான சாட்சிகளும், அடையாளங்களும் தினசரி அதிகமாகிக் கொண்டிருக்கின்றன. அதை நாம் தினமும் கண்டு கொண்டிருக்கின்றோம். இன்றைய நாட்களில் ஜமாஅத்தின் பக்கம் உலகத்தினுடைய கவனம் உருவாகி இருக்கின்றது. ஜமாஅத்தினுடைய தூதுச் செய்தியை கேட்கின்றார்கள். இதுவும் அடையாளங்களில் ஒரு அடையாளமாகும். ஊடகங்களுக்கும் கவனம் ஏற்பட்டுள்ளது. அது ஏதேனும் ஒரு சாக்குப் போக்கின் காரணமாக இருந்தாலும் சரி. எவ்வாறிருப்பினும் அடையாளங்கள் ஒவ்வொரு அறிவுள்ளவருக்கும் தினமும் வெளிப்பட்டுக் கொண்டிருக்கின்றன. பிறகு பிறிதோரிடத்தில் அன்னார் கூறுகின்றார்கள்.

இந்த விஷயம் நினைவில் கொள்ள தகுதி வாய்ந்ததாகும். அதாவது இறைவன் இந்த அமைப்பை நிரூபிக்காமல் விட்டு விட வேண்டும். அவன் கூறுகின்றான். அது பராஹீனே அஹ்மதிய்யாவில் எழுதப்பட்டுள்ளது. அதவாது உலகில் ஒரு எச்சரிப்பாளர் வந்தார். உலகமோ அவரை ஏற்றுக் கொள்ளவில்லை. ஆனால் இறைவன் அவரை ஏற்றுக் கொள்வான். மேலும் வலுவான தாக்குதல்களைக் கொண்டு அவரது உண்மைத்துவத்தை வெளிப்படுத்துவான். எந்த மக்கள் நிராகரித்தார்களோ மேலும் நிராகரிப்பதில் விரைகின்றார்களோ அவர்களுக்கு இழிவும், ஏளனமும் விதிக்கப்பட்டுவிட்டது. இது மனிதனால் இட்டுக்கட்டப்பட்டதாக இருந்தால் எப்பொழுதோ அழிந்திருக்கும் என்று கூட அவர்கள் சிந்திப்பதில்லை. ஏனென்றால் இறைவன் இட்டுக்கட்டுபவருக்கு எந்த அளவுக்கு எதிரியாக இருக்கின்றான் என்றால் உலகில் வேறு எவருடனும் அந்த அளவிற்கு எதிரியாக இருப்பதில்லை. எவர் என்னுடைய விருப்பத்திற்காக தன்னுடைய விருப்பத்தை விடுகின்றாரோ மேலும் தன்னுடைய மன இச்சையை விடுவதற்கும், ஏற்பதற்கும் என்னை நீதி வழங்குபவராக ஆக்குகின்றாரோ அவரே என்னோடு இருக்கின்றார். இப்போது நான் அறிவேன். அதாவது அடையாளங்கள் தொடர்பாக நான் அதிகம் எழுதிவிட்டேன். இறைவன் அறிவான். இந்த விஷயம் சரியானதாகும்.மேலும் தூய்மையானதாகும். அதாவது இதுவரை ஏற்குறைய 3000 அல்லது அதைவிட அதிகமான விவகாரங்கள் எனக்காக இறைவன் புறமிருந்து வெளிப்பட்டுள்ளன. இது மனித சக்திக்கு அப்பாற்பட்டதாகும். மேலும் இனிமேலும் இதன் வாயில் அடைபடவில்லை. அல்லாஹ் இந்த அடையாளங்களை புரிந்த கொள்ளக்கூடிய ஞானத்தை இந்த உலகிற்கு வழங்குவானாக. மேலும் தன்னுடைய அறிவு மற்றும் விருப்பத்திற்கேற்ப அடையாளங்களை மட்டும் வேண்டாமல் இருக்கக்கூடிய, காலத்தின் தேவை மற்றும் காலத்தின் ஓசை மற்றும் இறைவன் புறமிருந்து ஒருவரின் வருகையின் தேவை போன்றவற்றை அவர்கள் கேட்பதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக. அதை புரிவதற்கு முயற்சி செய்பவர்களாவார்களாக. அல்லாஹ்வா அனுப்பப்பட்டவரை தேடி அவரை ஏற்றுக் கொள்பவர்களாவார்களாக. அதன் மூலமாக இவ்வுலகில் குழப்பங்கள் முடிவுறட்டுமாக.

இன்று ஒரு ஜனாஸா காயித் தொழுகையை தொழ வைப்பேன். மதிப்பிற்குரிய அப்துல் கஃப்பார் சாஹிப் அவர்களின் மகன் குலாம் காதிர் சாஹிப் தர்வேஷ் காதியானுடையதாகும். அன்னார் 12 நவம்பர் 2014 அன்று 90 வயதில் இறை நியதிக்கேற்ப வஃபாத் ஆனார்கள். இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன். அன்னார் 313 தர்வேஷ்களில் ஒருவராவார். அஹ்மதிய்யத்தின் வரலாற்றில் இவர்களுடைய தர்வேஷ் எண் 189 ஆகும். ஏப்ரல் 1925 ல் குஜராத்திலுள்ள ஷாதிவால் என்ற ஊரில் பிறந்தார்கள். ஆரம்பக் கல்வியையும் அங்கேயே பயின்றார்கள். இராணுத்தில் சேர்ந்தார்கள். பணியில் சேர்ந்து 4 வருடங்கள் ஆகியிருந்த தருணத்தில் காதியானை பாதுகாப்பதற்கு இளைஞர்கள் தங்களுடைய வாழ்க்கையை அர்ப்பணியுங்கள் என்று ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது

(ரலி) அவர்கள் கூறியதற்கிணங்க 1947 ஆம் ஆண்டு காதியான் வந்தார்கள். தப்லீக் செய்வதற்கான மிகுந்த ஆர்வம் இருந்தது. குறிப்பாக சீக்கியர்களுக்கு தப்லீக் செய்து வந்தார்கள். நோய்வாய்ப்பட்டிருந்தும், பலகீனமாக இருந்தும் கூட இறுதி காலம் வரை மஸ்ஜிது முபாரக் சென்று தொழுது வந்தார்கள். அல்லாஹ் அன்னாரின் பதவியை உயர்த்துவானாக. அன்னாரைத் தவிர ஒரு சில மாதங்களுக்கு முன் வஃபாத்தான இரு தர்வேஷ்கள் உள்ளனர். அவர்களுடைய ஜனாஸா காயிப் தொழுகை தொழப்பட்டிருந்தது. ஆனால் அவர்களைப் பற்றிய நற்குறிப்பு கூறப்படாமல் இருந்தது. அவர்களைப் பற்றியும் இன்று கூற விரும்புகின்றேன். சகோதரர்கள் அவர்களையும் அவர்களுடைய சந்ததிகளையும் தங்களுடைய துஆக்களில் நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். இந்த தர்வேஷ்கள் மாபெரும் தியாகங்களை செய்துள்ளார்கள். ஒரு நீண்ட காலம் மிகவும் ஏழ்மையிலும், மிகவும் சாதாரண நிலைமையிலும், மிகக் குறைந்த வருமானத்தில் காதியானில் வாழ்வை கழித்தார்கள். மேலும் அல்லாஹ்வின் அடையாளங்களை பாதுகாப்பதற்கான உரிமையை நிறைவேற்றினார்கள். அவர்களில் ஒருவர் மிர்ஸா முஹம்மது இக்பால் சாஹிப். இவர் மிர்ஸா ஆதம் பேக் சாஹிபின் மகன் ஆவார்கள். 11 ஜுன் 2014 அன்று வஃபாத் ஆனார்கள். இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன். இவர்களின் தந்தை வழி பாட்டனார் ஹஸ்ரத் மிர்ஸா ரஸுல் பேக் சாஹிப் சஹாபி ஆவார்கள். தாய் வழிப் பாட்டனார் ஹஸ்ரத் மிர்ஸா ரியாஸ் பேக் சாஹிபும் சஹாபியாக இருந்தார்கள். இவர்கள் ஆரம்ப 313 தர்வேஷ்களில் ஒருவராவார்கள்.

பிறகு சவுத்ரி Manzoor Ahmad Cheema அவர்கள் ஆவார்கள். இவர்கள் 26 ஜுலை 2014 அன்று தனது 94 வது வயதில் வஃபாத் ஆனார்கள். இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன். அன்னார் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் சஹாபி சவுத்ரி நூர் அலி சாஹிப் சீமா அவர்களின் மூத்த மகனாவார்கள். அன்னார் ஆங்கிலேய படையில் இருந்தார்கள். ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் காதியானைப் பாதுகாப்பதற்காக ஜமாஅத் சகோதரர்களை அழைத்த போது அன்னார் தன்னுடைய தொண்டுகளை வழங்கினார்கள். மேலும் தர்வேஷாகக்கூடிய நற்பாக்கியத்தைப் பெற்றார்கள். வயது அதிகமாக இருந்தும் கூட ஒரு நீண்ட காலம் ஊன்று கோலின் உதவியுடன் பள்ளிவாயிலுக்கு தொழுதவற்காக வருவார்கள். தூய, கணிவான, உயிருள்ள இதயமுடைய, கருணையுள்ள மேலும் அன்பு செலுத்தக்கூடிய மனிதராக இருந்தார்கள். வஸிய்யத்தும் செய்திருந்தார்கள்.

Friday Sermon delivered by Hadrath Khaleefathul Masih Alkhamis (atba)
at Baithul Futuh,London – on 21.11.14
Summarized by Majlis Ansarullah Bharat
Tamil Translation : Moulavi. M.B. Tahir Ahmad
Published By Nazarath Nashr-O-Isha'ath,Sadr Anjuman Ahmadiyya - Qadian, 143516